# பெருநகர சென்னை மாநகராட்சி
## செய்தி வெளியீடு

**செ.வெ.எண் : 194** **நாள் : 29.11.2018**

**கஜா புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் துப்புரவு பணிகளில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி மதிப்பூதியமாக ரூ.1000/– வழங்கப்படும்!**

**மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத்திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தகவல் !!**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான மாண்புமிகு அம்மா அவர்களின் அரசானது, கஜா புயலால் பாதிக்கப்பட்ட தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை சீரமைக்க போர்க்கால அடிப்படையில் செயல்பட்டு வருகின்றது. புயல் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அமைச்சர் பெருமக்கள் களப்பணியாற்ற தொடங்கி, தற்போது வரை மறுசீரமைப்பு பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத்திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது :–

கஜா புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் துப்புரவு பணிகளில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மதிப்பூதியம் வழங்க ஆணையிட்டுள்ளார்கள்.

கஜா புயலால் கடுமையாக பாதிக்கப்பட்ட தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் துப்புரவு பணிகளை மேற்கொள்ள பல்வேறு மாவட்டங்களுக்குட்பட்ட மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளிலிருந்து 2400 நபர்கள், பேரூராட்சிகளிலிருந்து 1624 நபர்கள் மற்றும் ஊரக வளர்ச்சித் துறையிலிருந்து 3060 நபர்கள் என மொத்தம் 7084 துப்புரவு பணியாளர்கள் தூய்மைப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இந்த துப்புரவு பணியாளர்கள் கடும் பாதிப்படைந்த சூழ்நிலையில் உள்ளூர் மக்களுடன் இணைந்து சிறப்பாக தூய்மை பணிகளை மேற்கொண்டனர்.

இப்பணிகளில் ஈடுபட்ட துப்புரவு பணியாளர்களை பாராட்டும் விதமாக அவர்களுக்கு மதிப்பூதியம் வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள். இதனைத் தொடர்ந்து ஒவ்வொரு துப்புரவு பணியாளர்களுக்கும் ரூ.1000/– சிறப்பு ஊக்கத் தொகையும், மேலும் அரிசி, போர்வை, லுங்கி உட்பட 16 வகையான பொருட்கள் அடங்கிய பரிசு பெட்டகம் ஒன்றும் வழங்கப்படும் என மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத்திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**